**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(12.09.2015 முதல் 16.09.2015)**

**அறிக்கை எண் 71/2015** **தேதி: 11.09.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 31°செ முதல் 37°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 21°செ முதல் 28°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 16°செ முதல் 21°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசான மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (12.09.2015 முதல் 16.09.2015)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 64-68 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 54-57 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 15 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 12.09.15 | 0 | 32 | 23 | 5 | 68 | 57 | 15 | தென்மேற்கு |
| 13.09.15 | 0 | 32 | 23 | 5 | 66 | 56 | 15 | தென்மேற்கு |
| 14.09.15 | 0 | 32 | 23 | 5 | 65 | 55 | 15 | தென்மேற்கு |
| 15.09.15 | 0 | 32 | 23 | 5 | 64 | 54 | 15 | தென்மேற்கு |
| 16.09.15 | 0 | 32 | 23 | 5 | 68 | 56 | 15 | தென்மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் 5 நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது நிலவும் வானிலையை கருத்தில் கொண்டு குறுவை பருவத்தில் நடவு செய்த நெல்லினை அறுவடை செய்து தானியங்களை 12 சதவீத ஈரப்பதத்திற்கு உலர்த்தி சேமிக்கவும்.
- ✓ தற்போது நிலவும் வானிலையை பயன்படுத்தி நான்கு இலைப் பருவத்திலுள்ள சம்பா நெல் நாற்றினை நாற்றாங்காலிலிருந்து பிடுங்கி ஒரு குழிக்கு இரண்டு நாற்றுக்கள் வீதம் வயலில் நடவு செய்யவும். நடவு செய்வதற்கு முன்பு நாற்றின் வேரினை 1 கிலோ அசோஸ்பைரில்லம் மற்றும் 1 கிலோ பாஸ்போபேக்டீரியா கொண்ட 40 லிட்டர் கலவையில் ஊரவைக்கவும்.
- ✓ மேகமூட்டத்துடன் காற்றின் ஈரப்பதம், வேகம் மற்றும் மிதமான வெப்பநிலை நிலவுவதால் மஞ்சளில் இலைப்புள்ளி நோய் வரவாய்ப்புள்ளது. பாதிக்கப்பட்ட வயலுக்கு ஒரு எக்டருக்கு 500 கிராம் கார்பன்டசிம் மருந்தினை தெளிக்கவும்.
- ✓ காற்றின் வேகம் மணிக்கு 14 கிலோ மீட்டரை விட அதிகமாக இருப்பதால் பிப்ரவரி மாதத்தில் நடவு செய்த வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ வரும் 5 நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது நிலவும் வானிலையை கருத்தில் கொண்டு குறுவை பருவத்தில் நடவு செய்த நெல்லினை அறுவடை செய்து தானியங்களை 12 சதவீத ஈரப்பதத்திற்கு உலர்த்தி சேமிக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**